# இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**1976 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 17 ஆந் தேதிய**

**பகுதி II இற்குக் குறைநிரப்பி**

**( 29. 12. 76 ஆந் தேதியன்று வெளியிடப்பட்டது )**


# பதுளை ஸ்ரீ சத்தர்மானந்த கழகம் (கூட்டிணைத்தல்)

*பதுளை ஸ்ரீ சத்தர்மானந்த கழகத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்*

*அரசினர் ஆணைப்படி வெளியிடப்பட்டது*


*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*

---

*கொழும்பு, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்:*

## பதுளை ஸ்ரீ சத்தர்மானந்த கழகம் (கூட்டிணைத்தல்)

### பதுளை ஸ்ரீ சத்தர்மானந்த கழகத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

முன்னுரை.

"பதுளை ஸ்ரீ சத்தர்மானந்த கழகம்" என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான கழகமொன்று, அதன் உறுப்பினரால் இணங்கிக் கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்கச் சொல்லப்பட்ட கழகத்தினேடு தொடர்புபட்ட எல்லாக் கருமங்களையும் பயனுற நிறைவேற்றுவதற்கும் கொண்டு நடாத்துவதற்குமென இதன் முன்னர் பதுளையில் தாபிக்கப்பட்டுள்ளதாதலாலும் :

சொல்லப்பட்ட கழகம் எக்குறிக்கோள்களுக்கும் கருமங்களுக்குமாகத் தாபிக்கப்பட்டதோ அப்பல்வேறு குறிக்கோள்களையும் கருமங்களையும் இதுவரை அது வெற்றிகரமாக நிறைவேற்றியும் கொண்டு நடாத்தியும் வந்துள்ளதாதலாலும், அது கூட்டிணைக்கப்பட விண்ணப்பித்துள்ளதாதலாலும், அவ்விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்கள் நன்மைக்கானதாதலாலும் :

இலங்கைக் குடியரசின் தேசிய அரசுப் பேரவையினுல் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

சுருக்கப் பெயர்.

**1.** இச்சட்டம், 1976 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, பதுளை ஸ்ரீ சத்தர்மானந்த கழகச் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

பதுளை ஸ்ரீ சத்தர் மானந்த கழகத்தைக் கூட்டிணைத் தல்.

**2.** இச்சட்டம் நிறைவேற்றப்பட்டதிலிருந்தும் அதன் பின்னரும் (இதனகத்து இதன்மேல் "கழகம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) பதுளை ஸ்ரீ சத்தர்மானந்த கழகத்தின் இப்போதுள்ள தலைவர், துணைத் தலைவர்கள், முகாமைக் குழு உறுப்பினர்கள் என்போரும், சொல்லப்பட்ட பதுளை ஸ்ரீ சத்தர்மானந்த கழகத்தின் இப்போதுள்ள அல்லது இத்தால் அமைக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினராக இனிமேல் சேர்த்துக்கொள்ளப்படும் அத்தகையோரான அத்தனையாட்களும், (இதனகத்துப் பின்னர் "கூட்டுத்தாபனம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) "பதுளை ஸ்ரீ சத்தர்மானந்த கழகம்" என்ற பெயரின் கீழும், மகுடத்தின் கீழும் இடையறு வழியுரிமை கொண்ட கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றுதல் வேண்டும். அப்பெயர் கொண்டு எல்லா நீதிமன்றங்களிலும் அது வழக்குத் தொடுக்கலாம் என்பதுடன், வழக்குத் தொடுத்தலும் வேண்டும். அதற்கெதிராகவும் வழக்குத் தொடுக்கப்படலாம் என்பதுடன், தொடுக்கப்படலும் வேண்டும். அத்துடன் ஒரு பொது இலச்சினையை வைத்திருக்கவும் பயன்படுத்தவும் விரும்பியாங்கு அதனை மாற்றவும் அது முழுத்தத்துவமும் அதிகாரமும் உடையதால் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக் கோள்கள்.

**3.** கூட்டுத்தாபனம் அமைக்கப்படும் பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டும் என இத்தால் வெளிப்படுத்தப்படுகிறது :—

(அ) ஸ்ரீ சத்தர்மானந்த பிரிவேனுவின் முன்னேற்றத்திற்கான ஒழுங்குகளைச் செய்தல் ;

(ஆ) பிரிவேனுக் கல்வியை முன்னேற்றுதல் ;

(இ) விடுதிவாழ் புத்த குருமார்கள் அனைவருக்கும் "சிவ்பஸய" வசதிகளை ஏற்பாடு செய்தல் ;

(ஈ) பிரிவெனுவில் புதிய கட்டிடங்களை நிர்மாணித்தலும், தற்போதுள்ள கட்டிடங்களை புனரமைப்புச் செய்தலும் ;

24189—6,920 (76/12)

(உ) மாணவர் விடுதிக்கும், பிரிவெனுவிற்கும் தேவையான உபகரணங்களை வழங்குதல் ;

(ஊ) பிரதேசத்தில் வதியும் பௌத்த மக்களின் மதவழிபாடுகளை ஊக்குவிக்கும் பொருட்டு விகாரையொன்றினை அமைத்தல் ;

(எ) தர்மபோதனைப் பாடசாலையினை முன்னேற்றுதல் ;

(ஏ) தர்மபோதனைகளை நடாத்துதலும், பௌத்த மத நடவடிக்கைகளை முன்னேற்றுவதற்குத் தேவையான ஒழுங்குகளைச் செய்தலும்.

**நிறைவேற்றுக் குழு.**

4. (1) கூட்டுத்தாபனத்தின் அலுவல்கள், அப்போது வலுவிலுள்ளனவான கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமைய, கூட்டுத்தாபனத்தின் அப்போது வலுவுள்ள விதிகளுக்கிணங்க தெரிவு செய்யப்படும் அத்தகைய எண்ணிக்கையினரான ஆட்களைக் கொண்டமைந்த நிறைவேற்றுக் குழு ஒன்றினால் நிருவகிக்கப்படல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் முதலாவது நிறைவேற்றுக் குழு இச்சட்டம் ஆரம்பமாகும் தேதியில் பதவி வகிக்கும் கழகத்தின் நிறைவேற்றுக் குழுவாதல் வேண்டும்.

**கூட்டுத்தாபனத்தின் விதிகள்.**

5. (1) உறுப்பினரின் ஏதேனும் ஆண்டுப் பொதுக் கூட்டத்திலும் உறுப்பினரின் வாக்குப் பெரும்பான்மை கொண்டும், உறுப்பினரைச் சேர்த்தல், அவர்கள் விலகுதல் அல்லது அவர்களை நீக்குதல் என்பவற்றுக்காகவும், நிறைவேற்றுக் குழுவினதும், கூட்டுத்தாபனத்தின் பல்வேறு அலுவலர், முகவர், சேவையாளர் என்போரினதும் கடமைகள் புரியப்படுவதற்காகவும் கூட்டுத்தாபனத்தின் அலுவல்களைக் கையாள்வதில் பின்பற்றப்பட வேண்டிய நடவடிக்கை முறைக்காகவும், அத்துடன் வேறுவகையில் பொதுவாக அதன் அலுவல்களை முகாமை செய்தலும் அதன் குறிக்கோள்களை எய்துதலும் என்பவற்றுக்காகவும் கூட்டுத்தாபனம் காலத்துக்குக் காலம் விதிகளை ஆக்குதல் அதற்குச் சட்டமுறையானதாகும். அத்தகைய விதிகள் ஆக்கப்பட்டதும் அதேவிதமான கூட்டத்தில், (2) ஆம் உட்பிரிவின் தேவைப்பாடுகளுக்கமைய அவை மாற்றப்படலாம், அவற்றிற்குச் சேர்க்கப்படலாம், அவை திருத்தப்படலாம் அல்லது நீக்கஞ் செய்யப்படலாம்.

(2) அக்காலத்து வலுவுள்ளதாயிருக்கும் விதியெதுவும் அல்லது இதன் பின்னர் ஆக்கப்படக்கூடிய எவ்விதியும் கூட்டுத்தாபனத்தின் பொதுக் கூட்டமொன்றில் சமூகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினரில் மூன்றில் இரண்டு பங்கினரின் வாக்கு கொண்டன்றியும், அத்தகைய மாற்றம், சேர்க்கை, திருத்தம் அல்லது நீக்கம் நிறைவேற்றுக் குழுவால் முன்னதாகவே அங்கீகரிக்கப்பட்டிருந்தாலன்றியும், மாற்றப்படலாகாது, திருத்தப்படலாகாது, நீக்கப்படலாகாது அல்லது அதற்கு எதுவும் சேர்க்கப்படலாகாது.

(3) இச்சட்டம் ஆரம்பமாகும் தேதியன்று வலுவுள்ளனவாயிருந்து வரும் இக்கழகத்தின் விதிகள் இப்பிரிவின் கீழாக்கப்பட்ட கூட்டுத்தாபனத்தின் விதிகளாகக் கருதப்படல் வேண்டும்.

கழகத்தால செலுத்தப்படவுள்ள கடன்களும் கழகத்துக்குச் செலுத்தப்படவுள்ள கடன்களும்.

**6.** இச்சட்டம் நடைமுறைக்கு வரும் தேதியன்று கழகத்துக்குள்ள எல்லாக் கடன்களும் பொறுப்புக்களும் இத்தால் அமைக்கப்படும் கூட்டுத்தாபனத்தினால் செலுத்தப்படுதல் வேண்டும்; சொல்லப்பட்ட கழகத்துக்குச் சேர்மதியாகவுள்ள எல்லாக் கடன்களும், செலுத்தப்படவுள்ள ஒப்பப் பணங்கள், உதவுதொகைகள் என்பன யாவும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்கெனச் சொல்லப்பட்ட கூட்டுத்தாபனத்துக்குச் செலுத்தப்படுதலும் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் இலச்சினை எவ்விதம் பொறிக்கப்படவேண்டுமென்பது.

**7.** கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது நிறைவேற்றுக்குழுவின் எவரேனும் இரு உறுப்பினரது முன்னிலையிலல்லாமல் எத்தகையதுமான சாதனம் எதிலும் பொறிக்கப்படலாகாது; அவர்கள் சமுகமாயிருந்ததற்குச் சான்றாக அச்சாதனத்தில் அவர்களது பெயர்களை கையொப்பமிடல் வேண்டும். அவ்விதம் ஒப்பமிடுதல் எவரேனும் ஆள் சாட்சியாக கையொப்பமிடுதலுக்குத் தனிவேறானதாதல் வேண்டும்.

கூட்டுத்தாபனம் அசைவுள்ளதும் அசைவற்றதுமான ஆதனம் வைத்திருக்கலாம்.

**8.** ஏதேனும் கொள்வனவு, கொடை, நன்கொடை, இறுதி விருப்பாவணக் கையளிப்பு என்பன வகையாக அல்லது வேறு வகையாக அதற்குரித்தாக்கப்படும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனம் எதையேனும் பெறவும் வைத்திருக்கவும் கூட்டுத்தாபனம் சட்டப்படி தகுதியுடையதாதல் வேண்டும்; அத்துடன் அத்தகைய ஆதனம் யாவும், இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகவும், சொல்லப்பட்ட கூட்டுத்தாபனத்தின் அப்போதைய விதிகளுக்கமையவும், விற்க, ஈடுவைக்க, குத்தகை கொடுக்க, கொடுத்துமாற்ற அல்லது வேறு வகையில் கையாளவுள்ள முழுத் தத்துவத்துடனும் கூட்டுத்தாபனத்தினால் வைத்திருக்கப்படல் வேண்டும்.

குடியரசினதும் வேறு ஆட்களினதும் உரிமைகளைப் பேணல்.

**9.** இச்சட்டத்திலடங்கியுள்ளது எதுவும், குடியரசினது உரிமைகளையேனும், ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவினது உரிமைகளையேனும், இச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டவர்கள் தவிர்ந்த வேறு எவரேனும் ஆட்களினது உரிமைகளையேனும், பாதிப்பதாலாகாது.